# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
# கும்முடிப்பூண்டி

| | | |
|---|---|---|
| வழக்கு எண்: C.C. 313/2019 | காவல் நிலையம்: சிப்காட் | |
| பெயர் : நசிர் | அ.சா.4 | நாள் : 12.01.2026 |

அரசு தரப்பு சாட்சியான அ.சா. 4 என்பவரின் வாக்குமூலம் 1969 ஆம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.சுனில்குமார், கிரேடு 3 பென்ச் கிளர்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நசிர் | தாலுக்கா | : | கும்மிடிப்பூண்டி |
| தந்தை பெயர் | : | இப்ராஹிம் | தொழில் | : | தனியார் வேலை |
| கிராமம் | : | கும்மிடிப்பூண்டி | வயது | : | 59 |

**(எதிரி 2 மற்றும் 3 ஆஜர் எதிரி 1 ஆஜர் இல்லை. எதிரி வழக்கறிஞர் ஆஜர். எதிரிக்காக 355 B.N.S.S. ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் கும்மிடிப்பூண்டியில் பூர்வீகமாக வசித்து வருகிறேன். நான் சொந்தமாக ஓட்டல் வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் இந்த வழக்கின் இரண்டாம் எதிரி இராமமூர்த்தி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எந்த சாட்சி கையொப்பமும் என்னுடையது அல்ல.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 4.3.2013 தேதி பகல் 12 மணிக்கு ஜிஎன்டி பைபாஸ் சாலையில் சின்தலக்குப்பம் கிராமத்தில் தாபா ஓட்டல் அருகே நான் என்னுடைய ஓட்டலுக்காக சென்று கொண்டிருந்தேன் என்றும் அப்போது அங்கு சிப்காட் காவல்நிலைய உதவி ஆய்வாளர் இராமமூர்த்தி என்ற நபரை கைது செய்து வைத்திருந்தார் எனவும் அப்போது மேற்படி இராமமூர்த்தி உதவி ஆய்வாளரிடம் காவல் நிலைய குற்ற எண். 2/2013 செய்த குற்றத்தை ஒப்பு கொண்டு என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் நான் அதில் சாட்சி கைபொக்கம் இட்டேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் இந்த வழக்கின் எதிரிகளுக்கு சாதகமாக இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**(மறு விசாரணை இல்லை)**

ஒம்/– நசிர்

திறந்த நீதிமன்றத்தில் வழக்கறிஞர்கள் முன்னிலையில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SENTHIL KUMAR R
Digitally signed by SENTHIL KUMAR R
Date: 2026.01.12 13:21:39 +0530

மாவட்ட உ ரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,
கும்முடிப்பூண்டி